## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | C.C. 72/2022 | Date:19.06.2023 |
| Deposition of Witness for | : | **அ.சா.1** | |
| Name | : | **மணியம்மாள்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

(1, 2, 3, 4 -ம் எதிரிகள் ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை-**

1. நாகிசெட்டிபட்டி, அருந்ததியர் காலனியில் எத்தனை பேர் குடியிருக்கிறார்கள் என்றால் சுமார் 50 பேர் குடியிருப்பார்கள் 20 குடும்பங்கள் இருக்கும். அங்கு மொத்தமாக மூன்று வீதிகள் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த வீதியில் வசிக்கிறேன் என்றால் மூன்றாவது வீதியில் வசிக்கிறேன். எதிரிகள் நடுவீதியில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். எங்களுடைய வீதிக்கு தென்புறமாக நடுவீதி உள்ளது என்றால் சரிதான். மாரியம்மன்கோவில் கட்டி முடித்து எத்தனை வருடம் ஆகிறது என்றால் சுமார் 7 அல்லது 8 ஆண்டுகள் ஆகிறது. மேற்படி கோவில் அங்குள்ள அருந்ததியர் மக்களுக்கு பொதுவானது என்றால் சரிதான்.

2. கும்பாபிஷேகம் மேற்படி கோவிலுக்கு எப்போது நடைபெற்றது என்றால் கோவில் கட்டியபோது நடைபெற்றது. மேற்படி கோவிலுக்கு பூசாரி யார் என்றால் செங்கோடன். ஒவ்வொரு அம்மாவாசை அன்றும் கோவில் திறந்து பூஜை செய்யப்படும் என்றால் சரிதான். கோவில் சார்பாக வசூலாகும் தொகைகளை நிர்வகிப்பதில் பிரச்சனை இருந்ததால் எனது கணவரின் அண்ணன் தங்கராஜ் என்பவர் நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். என் கணவரும் சரிவர கணக்கு காண்பிக்கவில்லை என்று 1ம் எதிரி கார்த்தி கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவ்வாறு கோவில் சம்மந்தமாக

பிரச்சனை இல்லை. இதுசம்மந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டு அதுசம்மந்தமாக சங்ககிரி காவல்நிலையத்தில் தங்கராஜ் மற்றும் எதிரிகள் தரப்பை விசாரித்தார்கள் என்றால் இல்லை.

3. இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளுக்கும், எங்களுக்கும் பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. அம்மாவாசை நாட்களை தவிர மற்ற நாட்களில் கோவில் பூட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி கோவிலின் சாவி யாரிடம் இருக்கும் என்றால் பூசாரி செங்கோட்டுவேலுவிடம் இருக்கும். மேற்படி பூசாரி கோவிலை திறக்காமல் யாரும் கோவிலுக்குள் சென்று சாமி கும்பிடமுடியாது என்றால் சரிதான். கோவில் சம்மந்தமான கணக்கு வழக்குகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாகிசெட்டிபட்டியில் வசிக்கும் மக்கள் அனைவரும் அருந்ததியர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

4. ஊரில் நல்லது கெட்டது என்றால் பொதுமக்கள் தங்கராஜ்யிடம் சென்று தகவல் கொடுப்பார்கள் என்றால் அவ்வாறு இல்லை. 1ம் எதிரி கார்த்திக்குமார் காதல் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி திருமணத்திற்கு எங்களை அழைக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து சங்ககிரி காவல்நிலையத்திற்கு சுமார் 5 கி.மீ தான் இருக்கும் என்றால் சரிதான். காவல்நிலையத்தை தாண்டிதான் அரசுமருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். நானும், என் கணவரும் தனியாக இருந்து வருகிறோம் என்றாலும், எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் தங்கராஜ் அவர் மகன் பிரியதர்சன் ஆகியோர்கள் வசிக்கிறார்கள் என்றாலும் சரிதான்.

5. எங்கள் வீட்டிற்கும், மாரியம்மன் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி இருக்கும். எங்கள் வீதியை தாண்டி 1ம் எதிரி குடியிருக்கும் வீதிக்கும் அருகே தான் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னால் நாங்கள் மேற்படி கோவிலுக்கு சாமி கும்பிட சென்றுவந்தோம் என்றால் சரிதான். மேற்படி கோவிலில் 1ம் எதிரி கார்த்திக்குமார் எந்த பொறுப்பிலும் இல்லை என்றால் சரிதான். 31.12.2020 ம் தேதி இரவு அந்த பகுதி இளைஞர்கள் ரேடியோ மைக்செட் அமைத்து நடனம்

ஆடி கொண்டிருந்தார்கள் என்றால் காலை 11.00 மணியிலிருந்தே அவ்வாறுதான் இருந்தார்கள். மைக்செட் போட்டிருந்த நபர்கள் கவின்குமார், பூபதிராஜ் என்றால் சரிதான். அவர்கள் மட்டுமின்றி வேறு நபர்களும் இருந்தார்கள். நான் கோவிலுக்கு சென்றேனா என்றால் இல்லை. பிரியதர்ஷன் கோவிலுக்கு போகும்போது என்னிடம் கூறிசென்றாரா என்றால் இல்லை நான் என் வீட்டில் இருந்தேன். பிரியதர்ஷ்ன் வீட்டிற்கு வந்து சொன்னார் என்ற விவரத்தை புகாரிலோ போலிசார் விசாரணையிலோ தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன்.

6. போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் இருந்தபோது பகல் 03.00 மணிக்கு வந்து விசாரித்து எழுதிகொண்டார்கள். மீண்டும் மாலை 06.00 மணிக்கு வந்து உதவி ஆய்வாளர் விசாரித்து எழுதிகொண்டார். அதன்பிறகு போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்தவுடன் நானும், எனது கணவர் பழனிசாமியும், எனது கணவரின் அண்ணன் தங்கராஜ் , அவரது மகன் பிரியதர்ஷன் மற்றும் மகேஸ்வரி ஆகியோர்கள் மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் ஆமாம். போகும் வழியில் காவல்நிலையத்தில் புகார்கொடுக்கலாம் என்று பேசிகொண்டோமா என்றால் இல்லை.

7. தன்னை கோவிலுக்குள் அனுமதிக்கவில்லை என்று பிரியதர்ஷன் கூறியபிறகு நாங்கள் சென்று கேட்டோமா என்றால் இல்லை. பிரியதர்ஷன் வீட்டிற்கு வந்து கூறினார் என்று சொல்வேதே பொய் என்றால் சரியல்ல. எனது கணவரும், பிரியதர்ஷனும் ஆர்.எஸ்- ல் உள்ள கடைக்கு சென்றபோது 1ம் எதிரி கார்த்திக்குமார் பிரியதர்ஷனை அடிக்காமல் விடமாட்டேன் என்று கூறிய சங்கதி எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். பிரியதர்ஷனும், எனது கணவரும் கடைக்கு சென்றுவிட்டு திரும்பிவந்தபோது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் மாலை சுமார் 04.30 மணி முதல் 05.00 மணிக்கள் இருக்கும். அவ்வாறு திரும்பி வந்தபோது பிரியதர்ஷன் அவருடைய வீட்டிற்கும் , எனது கணவர் எங்கள் வீட்டிற்கும் வந்துவிட்டார் என்றால் சரிதான்.

8. வீட்டிற்கு வந்து அடித்ததாக சொல்லும் சம்பவம் எங்கள் வீட்டிற்கு முன்பு உள்ள வீதியில் நடைபெற்றதா என்றால் வாசற்படியில் நடைபெற்றது. சத்தம் கேட்டு வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தேனா என்றால் ஆமாம். நான் வந்து கேட்டபோது தங்கராஜ், பழனிசாமி, மகேஷ்வரி ஆகியோர்கள் வந்து கேட்கவில்லை என்றால் சரிதான். என்னை தாக்கியதாக சொல்லும் இடமும், அதே தெருதான் என்றால் வாசற்படியில்தான் வாசற்படியும் , ரோடும் ஒட்டினாற்போல் உள்ளது. என்னை எவ்வளவு நேரம் தாக்கினார்கள் என்றால் சுமார் 15 நிமிடங்கள். என்னுடைய சத்தம்கேட்டுதான் பழனிசாமியும், தங்கராஜும் வந்தார்களா என்றால் ஆமாம்.

9. அவர்களை எவ்வளவு நேரம் தாக்கினார்கள் என்றால் சுமார் 5 முதல் 10 நிமிடங்கள் வரை. எங்கள் வீட்டிற்கு அருகிலேயே முனுசாமி என்பவர் வீடும், புனிதா என்பவரின் வீடும், , கண்ணாயி , காசிமணி ஆகியோர்கள் வீடும் உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு நேரம் கழித்து எதிரி ராஜி வந்தார் என்றால் சுமார் 15 நிமிடம் கழித்து . ராஜி வந்தபோது மற்ற எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பிறகு எனது கணவரோ, தங்கராஜ்வோ 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்களா என்றால் இல்லை. நாங்கள் நான்குபேரும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் என்னை தவிர மற்றவர்கள் ஊசி மட்டும் போட்டுகொண்டார்கள். நான் சிகிச்சையில் சேர்ந்துகொண்டேன்.

10. நான் மருத்துவரிடம் எத்தனைபேர் எந்த ஆயுதத்தால் எங்கு வைத்து என்னை அடித்தார்கள் என்று கூறவில்லை என்றால் சரியல்ல கூறினேன். இடது கை ஆட்காட்டி விரலில் சிராய்ப்பு காயத்தை தவிர வேறு எதையும் மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பிரியதர்ஷன் சாமிகும்பிட சென்றதாகவும் அவரை சாமி கும்பட அனுமதிக்க மறுத்ததாகவும், எனது கணவரும், பிரியதர்ஷனும் ஆர்.எஸ். ல் உள்ள கடைக்கு சென்றதாகவும் அப்போது 1 ம் எதிரி பிரியதர்ஷனை பார்த்து உன்னை அடிக்காமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும், அதன்பிறகு பிரியதர்ஷன்

வீட்டிற்கு வந்த பிறகு 1 முதல் 3 எதிரிகள் வீட்டிற்கு வந்ததாகவும், எதிரிகள் எங்களை தாக்கியதாகவும், பின்னிட்டு 4ம் எதிரி கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும் கூறுவது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

11. என் கணவரின் அண்ணன் தங்கராஜ் கோவில் கணக்குகளை சரிவர ஒப்படைக்காததால் அதுகுறித்து 1ம் எதிரி கேட்டதால் அவர்கள் மீது விரோதம்கொண்டு நாங்கள் திட்டம்போட்டு பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய கிழிந்த ஜாக்கெட்டையும், ரத்த கரை படிந்த புடவையும் போலிசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். மேற்படி துணிகளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் அதை நான் உடுத்தியிருந்தேன். நான் சொன்னவிதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

S R BABU Digitally signed by S R BABU
Date: 2023.06.19 16:08:35 +0530

Sd /- Maniyammal

Judicial Magistrate No.1,
Sankari.